**100% வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 03** **நாள். 14.03.2019**

**சென்னை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் "94454 77699" என்ற கைப்பேசி எண்ணிற்கு தங்களது தகவல்களை தெரிவித்தால், அவர்கள் வாக்களிக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளும் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகம் மூலமாக மேற்கொள்ளப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.**

இந்திய தேர்தல் ஆணையம் பாராளுமன்ற பொதுத்தேர்தல்–2019ல் அனைவரும் அணுகத்தக்க தேர்தல்கள் மற்றும் "எந்த ஒரு வாக்காளரும் விடுபடக்கூடாது" (No Voter to be left behind) என்ற குறிக்கோளுடன் 100% வாக்குப்பதிவினை உறுதிசெய்யும் நோக்கத்தில் பல்வேறு விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மாற்றுத்திறனாளி வாக்காளர்களை கண்டறிந்து அவர்கள் வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடி மையங்களில் தேவையான அனைத்து வசதிகளையும் மேற்கொள்வதற்காக பல்வேறு சிறப்பு முகாம்கள் நடத்தி அவர்களது தகவல்களை சேகரித்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், ஓய்வூதியதாரர்கள் அலுவலகம், மாவட்ட கருவூலம் மற்றும் சமூக ஆர்வலர்கள் போன்ற பல்வேறு துறைகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களின்படி, வாக்காளர் பட்டியலில் உள்ள மாற்றுத்திறனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்டத்தில் 913 இடங்களில் 3,754 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. இம்மையங்களில் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்கு சென்று சிரமமின்றி எளிதில் வாக்களிக்க சக்கர நாற்காலிகள், சாய்தள வசதி, பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக வாக்குப்பதிவு இயந்திரத்தில் தொட்டு உணரக்கூடிய வகையில் பிரெய்லி (Braille) முறை போன்ற பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 பாராளுமன்ற தொகுதிகள் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்களை அடையாளம் காண சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகம்/பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கண்டறியவும், அவர்கள் 100% வாக்களிப்பதனை உறுதி செய்யவும், 24 மணிநேரமும் தனி அலுவலர்களுடன் இயங்கும்

அலுவலகத்தில் **“94454 77699”** என்ற கைப்பேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கைப்பேசி எண்ணிற்கு மாற்றுத்திறனாளி வாக்காளரோ அல்லது அவர்களது பெற்றோரோ அல்லது காப்பாளரோ அல்லது சமூக ஆர்வலர்களோ தொடர்பு கொண்டோ (அ) மிஸ்டு கால் (அ) வாட்ஸ் அப் மூலமாகவோ தொடர்பு கொண்டு மாற்றுத்திறனாளியின் வாக்காளர் அடையாள அட்டை எண், முகவரி மற்றும் வாக்குச்சாவடி மையம் போன்ற தகவல்களை தெரிவிக்கலாம். தகவல் பெறப்பட்டதும் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்கள், அவர்களை தொடர்பு கொண்டு தேர்தலில் வாக்களிக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வார்கள்.

எனவே, சென்னை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் “**94454 77699**” என்ற கைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு, தங்களது விவரங்களை தெரிவித்து, நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தல், பெரம்பூர் சட்டமன்ற இடைத்தேர்தலில் 100% வாக்களிக்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**